# செயலாற்றுகை அறிக்கை 2016

# சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

(2016.01.01-2016.12.31)

சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

இல. 80, 4வது மாடி, அதிகரண மாவத்தை, கொழும்பு 12

**www.lawcom.gov.lk**

1. அறிமுகம்

1969 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் இலங்கையின் சட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டதுடன், இலங்கையின் சட்ட ஆணைக்குழு சட்ட மறுசீரமைப்புக்களை பரிந்துரை செய்யப்படும் அரசாங்கத்தின் பிரதான நிறுவனமாகும். நிருவாகத்திற்காகவும், ஆராய்ச்சிகளுக்காக ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் சட்ட ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது.

2. நோக்கு

நல்லாட்சிக்காக சட்ட மறுசீரமைப்புக்களை மேம்படுத்தல் .

3. பணி

சட்ட மறுசீரமைப்புக்களை மேம்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்தல்

4. **நோக்கங்களும் தொழிற்பாடுகளும்**

சட்ட ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாவது, சட்ட மறுசீரமைப்புக்களை மேம்படுத்துதலாகும். அத்தகைய மேம்பாடுகளை நோக்கமாகக் கொண்டு சட்ட ஆணைக்குழுவின் மூலம் கீழே காட்டப்பட்டுள்ள பணிகள் செயற்படுத்தப்படுகின்றன.

i. சட்டத்தை கோவைப்படுத்தல்
ii. சட்டத்தின் முரண்பாடுகளை ஒழித்தல்
iii. பொருள் அளவிலானதும் நடவடிக்கை முறை சார்ந்ததுமான சட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் பேணுதல்.
iv. வழக்கொழிந்த மற்றும் அனாவசியமான சட்டங்களை நீக்கிவிடுதல்
v. சட்டத்தை எளிதாக்குதலும் நவீன மயப்படுத்தலும்
vi. சட்ட மறுசீரமைப்புக்கான பிரேரணைகளைப் பெற்று அவற்றை பரிசீலனை செய்தல்.
vii. மறுசீரமைக்கும் நோக்கத்துடன் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளை ஆராய்ந்து பார்ப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை காலத்தக்குக் காலம் தயார் செய்து அமைச்சரிடம் சமர்ப்பித்தல்
viii. ஏனைய நாடுகளின் சட்டமுறைமைகளைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்
ix. துணைச் சட்டங்கள் நன்கு ஏற்றுக் கொண்ட கோட்பாடுகளுக்கும் சட்டத்திற்கும் இயைபானதென்பதை பாதுகாக்கும் எண்ணத்துடன் பாராளுமன்றம் அல்லது வேறு சபைகளால் துணைச் சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அமுல்படுத்துவதை நிதமும் மீளாய்வு செய்தல்.
x. வழக்காடுதல் சம்பந்தப்பட்ட நிருவாகத் தன்மையிலான நடவடிக்கை முறை உட்பட சட்ட நடவடிக்கை முறைகளை

பகுத்தறிவு செய்தல் மற்றும் இலகுபடுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை முறையாகத் தயார் செய்தல்.

xi. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சட்டத்தைக் கோவைப்படுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களைத் தயார் செய்தல்.

**சட்ட ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களாக பின்பவருபவர்கள் நியமிக்கப்பட்டனர்.**

1. சனாதிபதி சட்டத்தரணி திரு. ரொமேஷ் த சில்வா (தலைவர்)
2. பேராசிரியர் திரு. லக்ஷ்மன் மாரசிங்க
3. சனாதிபதி சட்டத்தரணி திரு. பாலித பெர்னாந்து
4. திரு. ஜே. எம்.. சுவாமிநாதன்
5. திரு. என். செல்வகுமரன்
6. சனாதிபதி சட்டத்தரணி திரு. எம். இக்ரம் மொகமட்
7. சனாதிபதி சட்டத்தரணி திரு. எஸ்.அனில் சில்வா
8. சனாதிபதி சட்டத்தரணி கலாநிதி திரு. ஹர்ஷ கப்ரால்
9. சனாதிபதி சட்டத்தரணி திரு. மனோஹார த சில்வா
10. சனாதிபதி சட்டத்தரதணி திரு. சஞ்சீவ பீ. ஜயவர்தன
11. திருமதி. தாரணி எஸ் விஜேதிலக
12. பேராசிரியர் திருமதி. காமினா குணரத்ன
13. திரு. ஜீ.ஜீ. அருள்பிரகாசம்
14. திரு. திசத் விஜேகுணவர்தன
15. திரு. நவின் சுரத் மாரபன

திணைக்களப் பணியாட்டொகுதி :

- திருமதி செவ்வந்தி அபேசேகர, செயலாளர் (பதில்) சட்ட ஆணைக்குழு
- திருமதி லிலந்தி பதினாகொட, உதவிச் செயலாளர்/ சட்ட ஆணைக்குழு

## 5. சட்ட ஆணைக்குழுவின் செயலாற்றுகை முன்னேற்றம்

## 2016. பரிந்துரைகளின் முன்னேற்றம்

1) பயங்கரவாதச் சட்டத்தால் தேசிய பாதுகாப்பைப் பேணுதல்

| | |
|---|---|
| பரிந்துரை | பயங்கரவாதச் சட்டத்தால் தேசிய பாதுகாப்பைப் பேணுதல் |
| பின்னணி | பயங்கரவாதச் செயல்களை இனங்காணுதல், பொறுப்புக்களின் வகைகள், கைது செய்யும் அதிகாரம், உட்புகும் அதிகாரம், சோதனை செய்யும் மற்றும் கைப்பற்றும் அதிகாரம், கட்டுக்காப்பு கட்டளைகள், வழக்கு விசாரணை நடைமுறை, குற்றஒப்புதல், வழக்கு விசாரணைகள் மற்றும் மேன் முறையீடுகளுக்காக முன்னுரிமை, இணைந்த பொறுப்பு, உத்தியோகத்தர்- களைப் பாதுகாத்தல் என்பன. |
| தற்போதைய நிலைமை | 2016.02.17 ஆம் திகதி முடித்துக் கொள்ளப்பட்ட சட்டமூலம் மாண்புமிகு நீதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பில் ஆர்வமுள்ளவர்களுடன் கூட்டமொன்று அமைச்சில் நடாத்தப்பட்டதுடன், பாதுகாப்பு அமைச்சுடன் புறம்பான சட்டமூலமொன்றை ஆக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. நீதி அமைச்சின் செயலாளரும் சங்கத்தின் உறுப்பினர் ஒருவராவர். |

2) தற்போதுள்ள மணநீக்கம், பாதுகாவல் மற்றும் மணநீக்கப் படிகள் சட்டத்துக்கான திருத்தங்கள்

| | |
|---|---|
| பரிந்துரை | தற்போதுள்ள மணநீக்கம், பாதுகாவல் மற்றும் மணநீக்கப் படிகள் சட்டத்துக்கான திருத்தங்கள் |
| பின்னணி | சீர்திருத்திக் கொள்ள முடியாத விவாக முறிவுகள் சம்பந்தமான மணநீக்கம், மணநீக்கப் படிகள் மற்றும் பாதுகாவல் தொடர்பான தற்போதைய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் அவ்விடயங்களை இலகுவாக புரிந்துக் கொள்ளக்கூடியவாறு முறையாக தயார் செய்து அச் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் அனைத்தும் ஒன்று சேர்த்து ஒரு கட்டளைச் சட்டமாகக் கோவைப்படுத்தல்.<br>• பொதுவான இணக்கமொன்று உள்ள ஒரு சந்தர்ப்பம்<br>• ஒரு தரப்பினருக்கு மணநீக்கம் தேவைப்படாததினால் பரஸ்பர இணக்கமொன்று இல்லாத ஒரு சந்தர்ப்பம்.<br><br>பாதுகாவல் : பிள்ளையின் நன்மைக்காக<br>மணநீக்கப்படிகள் : நீதியான மற்றும் நியாயமான நீதிமன்ற நியாயாதிக்கம்<br><br>பராமரிப்பு : நீதிமன்ற நியாயாதிக்கம் நீதவான் நீதிமன்றத்திற்கல்ல மாவட்ட நீதிமன்றத்திற்கு உரித்தாக்க வேண்டுமென்பதுடன் அதற்கு குறைநிரப்பாக சேர்க்கப்பட்ட அதிகாரத்தை அமுல்படுத்தல் |

| | |
|---|---|
| | மற்றும் தண்டனைகளுக்கான அதிகாரத்தை மாவட்ட நீதிமன்றத்திற்கு உரித்தாக்க வேண்டும். |
| தற்போதைய நிலைமை | 2016.11.18 ஆம் திகதி சட்ட ஆணைக்குழுவினால் மேற்குறித்த சட்டமூலம் இறுதியாக நிறைவேற்றப்பட்டது. |

3) **2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க பிள்ளை கடத்தல் பற்றிய குடியியல் துறைகளுக்கான சமவாயச் சட்டத்திற்கு மற்றும் விசேடமாக அதன் 11 ஆம் பிரிவுக்குத் திருத்தங்கள்**

| | |
|---|---|
| பரிந்துரை | 2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க பிள்ளை கடத்தல் பற்றிய குடியியல் துறைகளுக்கான சமவாயச் சட்டத்திற்கு மற்றும் விசேடமாக அதன் 11 ஆம் பிரிவுக்குத் திருத்தங்கள் |
| பின்னணி | சர்வதேசப் பிள்ளை கடத்தல் சம்பந்தப்பட்ட சட்டத்திற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னுக்கு விதிப்பதற்காகும். |
| தற்போதைய நிலைமை | 2016.09.08 ஆம் திகதி நடைபெற்ற சட்ட ஆணைக்குழுக் கூட்டத்தின்போது, 2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க பிள்ளை கடத்தல் பற்றிய குடியியல் துறைகளுக்கான சமவாயச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவை மறுசீரமைப்பதற்காக கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணைகள் சட்ட ஆணைக்குழுவினால் பிரேரிக்கப்பட்டன.<br><br>1."(ஆ) அந்தப் பிள்ளையை திருப்பி அனுப்புவதனால் அந்தப் பிள்ளை உடல் ரீதியாக அல்லது உள ரீதியாக இம்சைக்கு உட்படும் அல்லது வேறு விதத்திலான தாங்க முடியாத நிலைமைக்கு உட்படும் பாரதூரமான அபாயம் உள்ளதௌ" என்னும் ஏற்பாட்டை நீக்கஞ் செய்து, அதற்கு "(ஆ) பிள்ளையை திருப்பி அனுப்புவதைப்பற்றி பிள்ளையின் அதிக விருப்பம் இல்லாதிருப்பின்" என்னும் ஏற்பாட்டைச் சேர்த்தல்;<br>அல்லது<br><br>2. (அ) மற்றும் (ஆ) அவ்வாறே வைத்துக் கொண்டு, "(இ) பிள்ளையை திருப்பி அனுப்புவதைப் பற்றி பிள்ளையின் அதிக விருப்பம் இல்லாதிருப்பின்" என உள்ளடக்குதல்; அல்லுத |

| | |
|---|---|
| | 3." (ஆ) பிள்ளையை திருப்பி அனுப்புவதைப் பற்றி பிள்ளையின் அதிக விருப்பம் இல்லாதிருப்பின் அல்லது அப் பிள்ளையை திருப்பி அனுப்புவதனால் அப்பிள்ளை உடல் ரீதியாக அல்லது உள ரீதியாக இம்சைக்கு உட்படும் அல்லது வேறு விதத்தில் தாங்க முடியாத நிலைமைக்கு உட்படும் பாரதூரமான ஆபத்து உள்ளதென்பதற்கு" ஆகியவாறு வாசிக்கப்படும் விதத்தில் அப் (ஆ) பிரிவை திருத்தஞ் செய்தல்<br><br>2016.11.18 ஆம் திகதி சட்ட ஆணைக்குழுவினால் மேலே காட்டப்பட்ட சட்டமூலம் இறுதியாக நிறைவேற்றப்பட்டது. |

4). கைது செய்தல் சம்பந்தப்பட்ட தற்போதைய சட்டம் மற்றும் தேவையான திருத்தங்களைப் பற்றி ஆராய்ந்து பார்த்தல்

| | |
|---|---|
| பரிந்துரை | கைது செய்தல் சம்பந்தப்பட்ட தற்போதைய சட்டம் மற்றும் தேவையான திருத்தங்களைப் பற்றி ஆராய்ந்து பார்த்தல் |
| பின்னணி | தற்போதுள்ள கைது செய்யும் நடைமுறையை திருத்தஞ் செய்வதற்காக ஆகும். |
| தற்போதைய நிலைமை | சனாதிபதி சட்டத்தரணி திரு. சஞ்சீவ ஜயவர்தன அவர்களால் பிற நீதிமன்ற நியாயாதிக்கங்களில் கைது செய்யும் நடைமுறைகள் என்னும் தொனிப் பொருளில் தயார் செய்யப்பட்ட ஆராய்ச்சி சட்டமூலம், கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கலந்தாலோசனை செய்யப்பட்டது.<br><br>அது 2016.10.27 ஆம் திகதி நடைபெற்ற சட்ட ஆணைக்குழுக் கூட்டத்தில், இந்தியாவின் குற்றவியல் நீதிக் கோவை (Criminal Justice Code of India) மற்றும் இந்திய வழக்குச் சட்டம் (Indian Case Law) கவனத்திற் கொண்டு கலந்தாலோசனை செய்யப்பட்டது. 2016.11.18 ஆம் திகதி நடைபெற்ற சட்ட ஆணைக்குழுக் கூட்டத்தில், சட்ட ஆணைக்குழுவினால் மேற்குறித்த சட்டமூலம் இறுதியாக நிறைவேற்றப்பட்டது. |

6. 2016.01.01 தொடக்கம் 2016.12.31 வரை நிதி முன்னேற்றம்

| விபரம் | 2016 ஆண்டிற்கான ஏற்பாடுகள் | நி.ஓ.66 இன் கீழ் மாற்றங்கள் | 2016 மொத்த தேறிய ஒதுக்கீடுகள் | 2016.12.31 திகதிக்கு செலவினம் | 2016.12.31 நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 14,860,000 | (230,000.00) | 14,630,000.00 | 12,141,540.66 | 83% |
| மூலதனச் செலவினம் | 1,800,000 | 230,000.00 | 2,030,000.00 | 1,432,108.78 | 71% |
| மொத்தம் | 16,660,000 | | 16,660,000.00 | 13,573,649.44 | 81% |

7. நிதிசார் செயலாற்றுகை (மீண்டுவரும் செலவினம்) **2016/01/01-2016/12/31** வரை

| செலவின விடயம் | செலவின விபரம் | 2016க்காக மொத்த வரவு செலவு மதிப்பீடு (ரூபா) | நி. ஓ. 66 இன் பிரகாரம் மாற்றல்கள் | 2016 மொத்தத் தேறிய ஒதுக்கீடு | 01/01/2016-31/12/2016 வரையிலான மொத்த செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | ஆளுக்குரிய வேதனாதிகள் | | | | |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 3,200,000.00 | 600,000.00 | 3,800,000.00 | 3,382,182.74 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறை நாட் சம்பளம் | 200,000.00 | - | 200,000.00 | 125,518.39 |
| 1003 | பிற படிகள் | 5,400,000.00 | - | 5,400,000.00 | 4,315,593.17 |
| | பிரயாணச் செலவுகள் | | | | |
| 1101 | உள்நாட்டு | 50,000.00 | - | 50,000.00 | 15,278.00 |
| 1102 | வெளிநாட்டு | 1,500,000.00 | - | 1,500,000.00 | 1,151,209.98 |
| | வழங்கல்கள் | | | | |
| 1201 | காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 350,000.00 | 10,000.00 | 360,000.00 | 358,522.25 |
| 1202 | எரிபொருள் | 320,000.00 | - | 320,000.00 | 268,570.00 |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 120,000.00 | 48,000.00 | 168,000.00 | 163,619.00 |
| | பேணல் செலவுகள் | | | | |
| 1301 | வாகனங்கள் | 500,000.00 | - | 500,000.00 | 499,934.05 |
| 1302 | இயந்திரங்களும் இயந்திரப்பொறிகளும் | 350,000.00 | (180,000.00) | 170,000.00 | 112,406.50 |
| 1303 | கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 100,000.00 | (88,000.00) | 12,000.00 | 9,548.00 |
| | சேவைகள் | | | | |
| 1402 | தபால் மற்றும் தொலைத் தொடர்பு | 500,000.00 | - | 500,000.00 | 273,142,07 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 1,100,000.00 | - | 1,100,000.00 | 960,413.29 |
| 1405 | பிற | 1,000,000.00 | (600,000.00) | 400,000.00 | 395,126.52 |
| | மாற்றங்கள் | | | | |
| 1502 | ஓய்வு நன்மைகள் | 50,000.00 | (20,000.00) | 30,000.00 | 0 |
| 1506 | அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி | 120,000.00 | - | 120,000.00 | 110,476.70 |
| | மொத்தம் | **14,860,000.00** | **(230,000.00)** | **14,630,000.00** | **12,141,540.66** |

8. நிதிசார் செயலாற்றுகை (மூலதனச் செலவினம்) 2016/01/01-2016/12/31 வரை

| செலவு விடயம் | செலவு விபரம் | 2016க்கான மொத்த வரவு செலவு மதிப்பீடு ரூபா | நி. ஓ. 66 இன் பிரகாரம் மாற்றல்கள் | 2016 மொத்தத் தேறிய ஒதுக்கீடு | 01/01/2016-31/12/2016 வரையிலான மொத்த செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | மூலதனச் சொத்துக்கள் புனர்வாழ்வு மற்றும் மேம்படுத்தல் | | | | |
| 2002 | இயந்திரங்களும் இயந்திரப்பொறிகளும் | 100,000.00 | - | 100,000.00 | - |
| 2003 | வாகனங்கள் | 200,000.00 | - | 200,000.00 | 198,775.84 |
| | மூலதனச் சொத்துக்களைக் கொள்ளல் | | | | |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 300,000.00 | 230,000.00 | 530,000.00 | 521,887.82 |
| | திறன் விருத்தி | | | | |
| 2401 | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 1,200,000.00 | - | 1,200,000.00 | 711,445.12 |
| | மொத்தம் | 1,800,000.00 | 230,000.00 | 2,030,000.00 | 1,432,108.78 |

9. அரசாங்க அலுவலர்களின் முற்பண "பி" கணக்கு - 2016 திசெம்பர் 31 திகதிக்கு

| | செலவினத்தில் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | பற்றுமீதிகளின் உச்ச எல்லை |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டத்தால் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லைகள்: | 1,200,000.00 | 200,000.00 | 2,500,000.00 |
| ஆண்டினுள் மீள்நோக்கு எல்லைகள் | - | - | - |
| ஆண்டு இறுதியில் உள்ளபடியான பெறுமதிகள்: | 1,130,190.00 | 849,630.74 | 2,202,794.94 |

முற்பணக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்பு - 2016

| | திணைக்களப் புத்தகங்களின்படி | திறைசேரி கணினி அறிக்கைகளின்படி |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொணரப்பட்ட மீதி (2016.01.01 திகதிக்கு) | 1,922,235.68 | 1,922,235.68 |
| கூட்டுக: ஆண்டினுள் மொத்த பற்று வைத்ததல்கள் | 1,130,190.00 | 1,276,956.00 |
| கழிக்குக: ஆண்டினுள் மொத்த வரவு வைத்தல்கள் | 849,630.74 | 996,376.74 |
| ஆண்டு இறுதியின் மீதி (2016.12.31 திகதிக்கு) | 2,202,794.94 | 2,202,794.94 |

10. **2016.12. 31** ஆம் திகதிக்கு பணியாட்டொகுதியின் அமைப்பு

| பதவி | தரம் | சம்பளப் படிநிலை | சேவை மட்டம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை (நிரந்தர) | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றி - டங்கள் |
|---|---|---|---|---|---|---|
| செயலாளர் | I | SL 1/2006 | 1 | 1 | - | 1 |
| பிரதி செயலாளர் | II | SL 1/2006 | 1 | 1 | - | 1 |
| உதவிச் செயலாளர் | III | SL 1/2006 | 1 | 4 | 2 | 2 |
| மொழிபெயர்ப்பாளர் | I | MN 6/2006 | 1 | 1 | 1 | - |
| கணக்கு உதவியாளர் | III | MN 4/2006 | 3 | 1 | - | 1 |
| அபிவிருத்தி அலுவலர் | III | MN 4/2006 | 3 | 4 | 2 | 2 |
| நூலகர் | III | MN 3/2006 | 3 | 1 | 1 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | III | MN 2/2006 | 3 | 8 | 2 | 6 |
| சுருக்கெழுத்தாளர் | III | - | 3 | 1 | - | 1 |
| சாரதி | III,II,I | PL 1/2006 | 4 | 4 | 4 | - |
| கா.கா.ச | III,II,I | PL 1/2006 | 4 | 3 | 3 | - |
| | மொத்தம் | | | 29 | 15 | 14 |